| | | |
|---|---|---|
| **Case No.** | **:** | **EA No. 1/2022 in EP No. 3/2019** |
| **தேதி** | **:** | **24.06.2025** |
| **பெயர்** | **:** | **அஸ்மத் அலி த/பெ. நூரூதீன்** |

ம.த.சா.2./(PW2) திரு. அஸ்மத் அலி த/பெ. நூரூதீன் என்பவருக்கு இந்நீதிமன்றத்தால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டது. சாட்சியின் அடையாளம் ஆதார் அடையாள அட்டையின் மூலம் உறுதி செய்யப்பட்டது.

**<u>ம.த.சா.2 (PW2) சாட்சி மீண்டும் அழைத்து எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.</u>**

1) என்ன பரிகாரம் கோரி இம்மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் இந்த மனு பாகப்பிரிவினை கோரி தாக்கல் செய்துள்ளேன். என்னுடைய தாத்தாவின் சொத்தில் பாகம் கோரி தான் இம்மனு தாக்கல் செய்துள்ளேன். இந்த மனுவில் ஜரீனாபீ மதசா 1 சாட்சியம் அளித்துள்ளார் என்றால் சரிதான். மதசா 1 ன் சாட்சியம் மற்றும் அவர் தாக்கல் செய்த ஆவணங்களின் விவரம் பற்றி என்கது தெரியுமா என்றால் தெரியும்.

2) மசா 1 தாக்கல் செய்த முதன்னை விசாரணை வாக்குமூலத்தை அதே போன்று கணிணியில் தட்டச்சு செய்து நான் என்னுடைய முதன்னை விசாரணை வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மசா1 சத்திய பிரமாண வாக்குமூலமும், என்னுடைய சத்திய பிரமாண வாக்குமூலமும் வெவ்வேறானது என்றால் சரிதான்.

3) நிறைவேற்று மனுவில் உள்ள சொத்து ஆதியில் யாருக்கு சொந்தமானது என்றால் 1950 ம் ஆண்டு என்னுடைய தாத்தா ஹாஜி அப்துல்ரகுமான் சாகிப் என்பவர் வாங்கினார். எனது தாத்தாவின் மாமானார் பெயர் என்ன என்றால் அவர் பெயரும் ஹ ாஜி அப்துல்ரகுமான் சாகிப் ஆகும். என்னுடைய பாட்டியின் பெயர் என்ன என்றால் ஜெய்னாபீ ஆகும். என்னுடைய பாட்டிக்கு பார்த்திமாபீ என்ற சகோதரி இருந்தாரா என்றால் இருந்தார். பார்த்திமாபீ என்பவரின் அம்மா பெயர் ஜெய்னாபீ என்றால் சரிதான். கதிஜாபீ யார் என்றால் எனக்கு தெரியாது.

4) என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் 1919 ம் ஆண்டு ஹாஜி அப்துல்ரகுமான் சாகிப் வாங்கியதாக தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். என்னுடைய தாத்தாவின் மாமனார் வாங்கியது. என்னுடைய தாத்தாவின் மாமனார் ஹாஜி அப்துல்ரகுமான் சாகிப் என்பவர் தான் ஆரம்பத்தில் அந்த நிறைவேற்று மனு சம்பந்தமான சொத்தினை வாங்கினார் என்றால் சரிதான். அவருக்கு தான் இரண்டு பெண் பிள்ளைகள் முறையே ஜெய்னாபீ மற்றும் பார்த்திமாபீ என்றால் சரிதான்.

5) எனது தாத்தாவின் மாமனார் எந்த ஆண்டு காலமானார் என்றால் 1922 ம் ஆண்டு காலமானார். எனது தாதத்தாவின் மாமனார் காலமான பின்னர் அந்த சொத்து அவருடைய மனைவி மற்றும் இரண்டு மகள்களுக்கு சொந்தமானது என்றால் சரிதான். எனது தாத்தாவின் மாமனாருக்கு சொந்தமான சொத்தினை அவருடைய வாரிசுகள் அனைவரும் ஒன்று சேர்ந்து தான் கிரையம் செய்யவோ, அடமானமோ செய்ய முடியும் என்றால் சரிதான்.

6) எனது தாத்தாவின் மாமனாரின் வாரிசு தாரர்கள் அனைவரும் சேர்ந்து விற்பனை செய்தால் மட்டுமே செல்லும் என்றால் எனக்கு தெரியவில்லை. எனது தாத்தாவின் மாமனாரின் சொத்து 32 அடிக்கு 120 அடி நீளம், அகலம் , கொண்ட மனைக்கு பாத்திபீயின் பேரன் தாஜீதீன் என்றால் சரிதான். அந்த வழக்கில் ஜெய்னாபீ வகைராவுக்கு பாதி சொத்து வேண்டும் என்ற வழக்கு போட்டார் என்றால் சரிதான். அந்த வழக்கில் பாதி சொத்து அவருக்கு பாதி பாகம் உரிமை இருப்பதாக முதன்னை தீர்ப்பு வழங்கப்பட்டது என்றால் சரிதான். அதன் அடிப்படையில் இறுதி நிலை தீர்ப்பாணை பிறப்பிக்க கோரி தாஜீதீன் மனு தாக்கல் செய்து அந்த மனுவில் வழக்கறிஞர் ஆணையர் நியமனம் செய்து அதன் அடிப்படையில் இறுதி நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

7) அந்த இறுதி நிலை தீர்ப்பாணையின் அடிப்பாடையில் தாவா சொத்தினை நீதிமன்றம் மூலமாக ஒப்படைக்ககோரி நிறைவேற்று மனு தாக்கல் செய்துள்ளார் என்றால் இது மட்டும் எனக்கு தெரியும். நான் இதற்கு முன்னர் எங்கு இருந்தேன் என்றால் துபாயில் கடந்த 15 ஆண்டுகளாக இருந்தேன். நான் துபாயில் இருக்கும் போது தாஜீதீன் தாக்கல் செய்த வழக்கு பற்றி எனக்கு தெரியுமா என்றால் எனக்கு 2019 ம் ஆண்டு தான் தெரியும்.

8) 2019 ஆண்டிற்கு முன்னர் எங்கள் வீட்டில் உள்ளவர்களுக்கு தெரியுமா என்றால் தெரியவாய்ப்பு இல்லை. ஜெய்னாபீ கிரையம் கொடுத்த சொத்திற்கும் தாவா சொத்திற்கும் சம்பந்தம் இல்லை. தாவா சொத்தின் நான்கு பக்க எல்லைகள் வெவ்வேறானது என்றால் சரியல்ல இரண்டும் ஒன்றுதான். 1950 ஆண்டு என்னுடைய தாத்தா அவருடைய மாமியாரிடமிருந்து கிரையம் பெற்றது செல்லாது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

9) என்னுடைய தாத்தாவின் பெயரும், என்னுடைய தாத்தாவின் மாமனாரின் பெயரும் ஒரே பெயர் என்பதனை காண்பிக்க ஆவணம் ஏதாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என்னுடைய பாட்டியும், அவருடைய அம்மா பெயரும் ஜெய்னாபீ என்பதை காண்பிக்க ஆவணம் ஏதாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள சத்திய பிரமாண வாக்குமூலத்தில் காட்டப்பட்டுள்ள உறவு முறைகளில் எனது தாத்தாவின் பெயர் ஹாஜி அப்துல்ரகுமான் சாகிப் என்று தெரிவிக்காமல் வெறுமனே அப்துல்ரகுமான் சாகிப என்று தெரிவித்துள்ளேன் என்றால் அது தட்டச்சு பிழையின் காரணமாக ஏற்பட்டு இருக்கலாம்.

10) மசா1 தாக்கல் செய்துள்ள சத்திய பிரமாண வாக்குமூலத்தின் 4 வது பத்தியில் என்னுடைய தாத்தாவின் பெயர் ஹாஜி அப்துல்ரகுமான் சாகிப் என்று தெரிவிக்காமல் அப்துல்ரகுமான் சாகிப் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது என்றால் அதுவும் தட்டச்சு பிழையின் காரணமாக ஏற்பட்டு இருக்கலாம். அதனால் தான் மசா1 சத்தியபிரமாண வாக்குமூலமும், என்னுடைய சத்திய பிரமாணவாக்குமூலமும் ஒரே மாதிரியாக இருப்பதாக ஏற்கனே தெரிவித்தேன் என்றால் சரியல்ல.

11) சத்தியபிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்களை யார் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டது என்றால் எனது வழக்கறிஞர் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டது. அதனை நான் படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். சத்தியபிரமாண வாக்குமூலத்தில் உள்ள 10வது பத்தியில் என்னுடைய தாத்தா ஹாஜி அப்துல்ரகுமான் சாகிப் தாவா சொத்தில் பாதி விற்பனை செய்துள்ளதாக தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான்.

12) நான் தாக்கல் செய்த மனுவின் விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். மேற்படி மனுவில் மீதி உள்ள பாதி பாகத்தில் தான் தாஜீதீன் வழக்கு தாக்கல் செய்திருக்கவேண்டும் என்று தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். மனுதாரர் 1950 ம் ஆண்டு

வாங்கிய சொத்தும், 1967 ம் ஆண்டு விற்பனை செய்ததாக சொல்லப்படும் சொத்திற்கும், வழக்கு சொத்திற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து ஹாஜி அப்துல்ரகுமான் சாகிப் என்பவர் தான் 1919 ம் ஆண்டு வாங்கிய சொத்தில் பார்த்திமாபீ என்பவரின் பேரன் தாஜீதீன் பாதி பாகம் கேட்டு வழக்கு போட்டது சரி என்றும், அதன் அடிப்படையில் இறுதி தீர்ப்பாணை வழங்கப்பட்டது சரி என்றும், அதன் அடிப்படையில் நிறை வேற்று மனு தாக்கல் செய்யப்பட்டது சரி என்றும், வழக்கு சொத்திற்கும் எனது தாத்தா சொத்திற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

13) இறுதி தீர்ப்பாணை உத்தரவுக்கு எதிராக மேல் முறையீடு செய்யவில்லை என்றால் சரிதான். மேல்முறையீடு செய்ய எந்த முகாந்திரமும் இல்லை என்பதால் மேல் முறையிடு செய்யவில்லை என்றால் சரியல்ல. அதனால் தான் இந்த நிறைவேற்று மனுவில் இந்த மனுவில் தாக்கல் செய்த இறுதி நிலை தீர்ப்பாணை பெற்றவரை அலைக்கழிக்கவேண்டும் என்ற நோக்கத்தில் செயல்படுகிறேன் என்றால் சரியல்ல. தாஜீதீன் ஒருதலைப்பட்சமான தீர்ப்பாணை பெற்றதாக நான் தெரிவித்திருப்பது தவறு என்றால் சரிதான். அந்த தீர்ப்பாணை இரு தரப்பினரும் விசாரித்து வழங்கப்பட்ட தீர்ப்பாணை என்றால் சரியல்ல.

14) தாஜீதீன் இறுதி நிலை தீர்ப்பாணை நிறைவேற்ற வழக்கறிஞர் ஆணையர் மூலம் தாவா சொத்தினை பார்வையிட்ட போது இவ்வழக்கு பற்றி எனக்கு தெரிந்திருந்தும் அப்போது நடவடிக்கை எடுக்காமல் நிறைவேற்று மனுவில் தற்போது வந்து மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அதனால் இந்த மனு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல. மசா 1 சாட்சியத்தில் தவறாக தெரிவித்த சங்கதிகளை சரிசெய்து சாட்சி சொல்லுவதற்காக நான் விசாரிக்கப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல. மனுதாரர் தரப்பில் ஒருவரை சாட்சியாக விசாரித்தால் போதும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை.**

**சாட்சியின் கையொப்பம் - Sd/. அஸ்மத் அலி**

Typewritten by the Typist Open Court to my dictation and to my hearing read over and interpreted to the witness and acknowledged by him/her to be correct.

Sd/.M. Kalimuthuvel,
District Munsif, Sriperumbudur.